பக்கங்கள் 18+4

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 11 ஞாயிற்றுக்கிழமை 26.01.2026 | அதிர்வு 179

## உலகத் தமிழர்களின் பேராளுமை பிரபாகரன்

**பழ.நெடுமாறன் புகழாரம்**



"உலகத் தமிழர்களின் பேராளுமையாகத் திகழ்ந்த வேலுப்பிள்ளை பிரபாகரன் உலகின் எந்தவொரு 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



04▶

### நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி:

# சிறீதரனை விலக்க அரசியல் குழு முடிவு

### சுமந்திரன் மட்டக்களப்பில் தெரிவிப்பு

(வாலகிருஸ்ணா)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் பணிப்பை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஏற்றுக்கொள்ள மறுத்த காரணத்தால், தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியை அவரிடமிருந்து மீளப் பெற கட்சி தீர்மானித்துள்ளது என்று கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இன்று பிற்பகல் மட்டக்களப்பு - களுவாஞ்சிகுடியில் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 04▶



# அரசின் கிவுல் ஓயாத் திட்டம் குறித்து தமிழ்க் கட்சிகள் தவறான பிரசாரம்

## மக்களுக்கு எதிரான எந்தத் திட்டமும் இல்லை என்கிறார் அமைச்சர்இராமலிங்கம் சந்திரசேகர்




கிவுல் ஓயா அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் முன்வைத்து வரும் குற்றச்சாட்டுகளை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மறுத்துள்ளார்.

"இந்தத் திட்டம் இன அல்லது மத அடிப்படையிலான நோக்கங்களுடன் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானதும், அரசியல் உள்நோக்கத்துடன் பரப்பப்படும் தவறான தகவல்களுமே." – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"கிவுல் ஓயாத் திட்டம், குறிப்பிட்ட ஓர் இனத்துக்கோ அல்லது சமூகத்துக்கோ எதிரானதாக அல்லாது, தேசிய அபிவிருத்தி, விவசாய வளர்ச்சி மற்றும் நீர்வள முகாமைத்துவத்தை இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட ஓர் அரசாங்கத் திட்டம்." – என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இந்த ஆட்சியின் கீழ் இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் எந்தவிதமான இடமும் இல்லை. அனைத்து மக்களையும் சமமாகக் கருதும் கொள்கையுடனேயே அரசாங்கம் செயற்படுகின்றது." – என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

தமிழ்க் கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளின்படி, கிவுல் ஓயாத் திட்டம் பாரம்பரிய தமிழ்ப் பகுதிகளில் நில அபகரிப்பையும், மக்கள் தொகை மாற்றத்தையும் நோக்கமாகக் கொண்டதாகக் கூறப்படுகின்றது. மேலும், உள்ளூர் மக்களின் சம்மதமின்றி இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்றும், சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்க மதிப்பீடுகள் போதிய அளவில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சந்திரசேகர், தமிழ் மக்களின் நில உரிமைகளும், சமூக உரிமைகளும் முழுமையாகப் பாதுகாக்கப்படும் என்றும், எந்தவொரு சமூகமும் அநீதிக்குள்ளாக்கப்பட அனுமதிக்கப்படமாட்டாது என்றும் உறுதியளித்துள்ளார்.

சட்டத்துக்கு முரணான நில கையகப்படுத்தல்கள் எதுவும் இடம்பெறாது என்றும், திட்டம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் உரிய சட்ட நடைமுறைகளின் கீழேயே மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கிவுல் ஓயாத் திட்டத்தின் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாய உற்பத்தி அதிகரிக்கப்படுவதோடு, ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்களுக்கு நிலையான நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டத்தை இன அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்காமல், நாட்டின் நீண்டகால அபிவிருத்தித் தேவையாகக் கருதி அணுக வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் வடக்கில் அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. அந்தக் காலகட்டங்களில் எல்லாம் அரசாங்கத்துடன் ஒட்டுண்ணியாக இருந்த தமிழ்க் கட்சிகள் இன்று தமிழ் மக்களுக்கு நன்மை நடக்கும் போது பொங்கி எழுகின்றன. தமது அரசியல் இருப்புக்கு இந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியால் தான் ஆபத்து என்பதால்தான் அவர்கள் மக்கள் நலன் திட்டங்களில் கூட அரசியல் சாயம் பூசி ஓர் இழிவான அரசியலை முன்னெடுத்து வருகின்றனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது கூட அங்தக் காணி அளவீட்டில் அரசியல் சாயம் பூசி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். தன்னுடைய அரச-யியல் வாக்கு வேட்டைக்காக ஒரு உரிய வகையில் இடம்பெற இருந்த காணி அளவீட்டை குழப்பினார்கள். அதில் மற்றுமொரு அங்கமாகவே இந்தத் திட்டத்துக்கும் போர்க்கொடி தொடுக்கின்றார்கள்.

தமக்கான அரசியல்பாதை எது என்பது தமிழ் மக்கள் இன்று நன்கு அறிந்து வைத்துள்ளனர். அதனால் தான் வரலாறு காணாத வகையில் வடகிழக்கில் கூட எங்களுக்கு ஆதரவு கிடைத்திருக்கின்றது.

இதைக் குழப்பவதற்குத்தான் காழ்ப்புணர்ச்சி அரசியலாக இப்படியான விசமதனமான பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றது. நாங்கள் மக்களுக்கு விரோதமான எந்தத் திட்டங்களையும் முன்னெடுக்க மாட்டோம்." – என்றார்.

# மீண்டெழுந்த மொட்டுக் கட்சி! உயருகின்றது மக்கள் ஆதரவு!!

## இப்படிக் கூறுகின்றார் நாமல்



"நாம் மீண்டெழுந்து முன்னோக்கிச் செல்கின்றோம். மக்கள் ஆதரவு அதிகரித்து வருகின்றது."


– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டு மக்கள் வழங்கும் செய்தி என்னவென்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் அவ்வாறு புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இதற்கான பதில் அடுத்த தேர்தலில் கிடைக்கப்பெறும்.

சிறைச்சாலைகளைக் காண்பித்து, எமது அரசியல் பயணத்தைத் தடுக்க முடியாது. அரசின் அரசியல் நிகழ்ச்சி நிரல் மூலம் எம்மை ஒடுக்க முடியாது. நாம் மீண்டெழுந்து முன்னோக்கிச் செல்கின்றோம். மக்கள் ஆதரவு அதிகரித்து வருகின்றது." – என்றார்.

## காய்ச்சல் காரணமாக இளைஞர் துயரச் சாவு



காய்ச்சல் காரணமாக இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் – கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த யூட் கிபோசன் (வயது 32) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 21ஆம் திகதியன்று அந்த இளைஞர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து, கடந்த 22ஆம் திகதி இரவு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், நேற்று மேலதிக சிகிச்சையின் போது உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## மயங்கிச் சரிந்து பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் – திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர், மலசல கூடத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த சுபாகரன் ரதினி (வயது 49) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மலசல கூடத்துக்குச் சென்ற தாயார் நீண்டநேரமாகியும் திரும்பி வராததைத் தொடர்ந்து, அவருடைய மகன் அவரைத் தேடிச் சென்றுள்ளார். இதன்போது, அந்தப் பெண் மயங்கிச் சரிந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

இதையடுத்து, அவர் உடனடியாக மீட்கப்பட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் குறித்த பெண் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**உலகத் தமிழர்களின்...**

விடுதலை அமைப்பும் செய்திருக்காத வகையில் பல்வேறு சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தினார்."

– இவ்வாறு தமிழகத்தின் மூத்த தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"தமிழக சட்டமன்றத் தேர்தல் பரப்புரைகள் சூடுபிடித்துள்ளன. தமிழ்த் தேசியம் – திராவிடம் இடையிலான கருத்து மோதலாக இருந்த விமர்சனங்கள், தற்போது தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் மற்றும் தந்தை பெரியார் ஆகியோர் தொடர்பான விமர்சனங்களாக மாறியுள்ளன.

உலகத் தமிழர்களின் இருபெரும் ஆளுமைகளான பெரியாரையும், பிரபாகரனையும் ஒருவருக்கு ஒருவர் எதிரானவர்கள் போன்று முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் விமர்சனங்கள் கண்டிக்கத்தக்கவை.

பெரியார் பெண்ணுரிமைக்காகத் தொடர்ந்து போராடியவர். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெண்களையும் சேர்த்து, ஆயுதப் பயிற்சி அளித்து களத்தில் போராட வைத்தப் பெருமை பிரபாகரனுக்கு மட்டுமே உண்டு. வேறு எந்த நாட்டின் விடுதலை இயக்கத்திலும் பெண் போராளிகள் சேர்க்கப்பட்டதில்லை.

2009ஆம் ஆண்டு இறுதிப்போருக்கு முன்பாக தமிழீழத்தின் பெரும் பகுதி விடுதலைப்புலிகளின் ஆட்சிக் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது. அப்போது பெரியாரின் முக்கிய கொள்கைகளில் ஒன்றான சாதி ஒழிப்பைச் செயற்படுத்திய பெருமை பிரபாகரனுக்கு மட்டுமே உண்டு.

சாதி ஏற்றத்தாழ்வுகளைக் கடைப் பிடிப்பவர்கள் மீது விடுதலைப்புலிகள் கடும் நடவடிக்கை எடுத்தனர். மேலும் பல புரட்சிகரமான சீர்திருத்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

பெரியார் உயிரோடு இருந்திருந்தால், தனது கோட்பாடுகளைச் செயல்படுத்தி வரும் பேரன் பிரபாகரனைச் சந்தித்துப் பாராட்ட நேரில் தமிழீழம் சென்றிருப்பார் என்பதில் ஐயமில்லை.

பெரியாரைப் பற்றியோ அல்லது பிரபாகரனைப் பற்றியோ எத்தகைய புரிந்துணர்வும் இல்லாமல் அவர்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் பேசுபவர்கள் தங்களின் தகாத செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

சாதி, சமய வேறுபாடுகளால் பிளவுப் பட்டுக் கிடக்கும் தமிழர்களை ஒன்றுபடுத்தவும், பகுத்தறிவுச் சமதர்மப் பாதையில் தொடர்ந்து நடக்கவும் அரும்பாடுபட்ட இரு தலைவர்களையும் கொச்சைப்படுத்தும் போக்கில் நடந்துகொள்பவர்களைத் தமிழ்கூறும் நல்லுலகம் ஒருபோதும் மன்னிக்காது."

– என்றார்.

# வெளிநாட்டுப் பெண் நீரில் மூழ்கி மரணம்!

பெந்தோட்டை கடற்பரப்பில் நீராடச் சென்ற வெளிநாட்டுப் பெண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் ரஷ்யாவைச் சேர்ந்த 49 வயதுடைய பெண் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் மேலும் சில வெளிநாட்டவர்களுடன் இணைந்து கடலில் நீராடிக் கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பெந்தோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**சிறீதரனை விலக்க...**

இதன்போது கருத்துத் தெரிவித்த சுமந்திரன் இவ்விடயம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

“சிறீதரனுக்கு நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியானது தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவினாலேயே வழங்கப்பட்டது.

தேர்தல் முடிந்த பின்னர் வவுனியாவில் அரசியல் குழுவின் கூட்டத்தில் அந்த நேரத்தில் மாவை சேனாதிராஜாவும் கலந்துகொண்டார்.

அந்த நேரத்தில் தேசியப் பட்டியல் ஆசனத்தை வைத்தியர் சத்தியலிங்கத்துக்கு வழங்குவதற்கும் அந்த அரசியல் குழுக் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்பட்டது.

அதேபோன்று நாடாளுமன்றத்தில் கொறடா பதவியை வைத்தியர் சத்தியலிங்கத்துக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டதுடன் நாடாளுமன்ற நடவடிக்கைக் குழுவின் பிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனையும் நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

நாடாளுமன்ற குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனை நாங்கள் நியமித்தோம்.

நேற்று திருகோணமலையில் நடைபெற்ற கூட்டத்தில் இவை பற்றி ஆராயப்பட்டன.

அரசியல் குழுவினால் நியமிக்கப்பட்ட நியமனங்களை மாற்றுவதற்கான அதிகாரம் அரசியல் குழுவுக்கே இருக்கின்றது. எந்தக் குழு நியமித்ததோ அதனை மாற்றுவதற்கு அதிகாரம் அந்தக் குழுவுக்கு உண்டு.

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் ஆலோசனையை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்ததன் காரணத்தால் அரசியல் குழுவினால் வழங்கப்பட்ட நியமனத்தை மீளப்பெறுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அரசியல் குழு அவர் மீது நம்பிக்கை வைத்து ஏகமனதாக நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியை அவருக்கு வழங்கியது. அதே அரசியல் குழு இரண்டு தடவைகள் அவர் அரசமைப்புக் கவுன்ஸிலிலிருந்து இராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற ஆலோசனையை ஏகமனதாக வழங்கியிருந்தது. நேற்றைய தினம் சுமார் நான்கு மணி நேரம் அதே கருத்தை அவரிடம் வலியுறுத்தியிருந்தோம்.

ஆகவே கட்சியின் எந்த உயர் குழு அவருக்கு அந்தப் பதவியை வழங்கியதோ, அந்தக் குழுவின் ஆலோசனையையும் வற்புறுத்தலையும் அவர் செவிமடுக்கவில்லையென்றால் அந்தப் பதவியை அவரிடமிருந்து எடுப்பது எனத் தீர்மானித்தோம்.” - என்றார்.



# தேசிய மாநாட்டுக்குத் தயாராகுங்கள்!

## ஈ.பி.டி.பி. கட்சியின் உறுப்பினர்களிடம் தலைவர் டக்ளஸ் நேரில் வேண்டுகோள்













**(எஸ்.நிதர்ஷன்)**

தேசிய மாநாட்டை நடத்தி கட்சியை எழுச்சி கொள்ள வைப்பதற்குத் தயாராகுமாறு கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, "எம் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பான உண்மைகளை எதிர்காலம், நாம் நேசிக்கின்ற மக்களுக்கு வெளிப்படுத்தும்" என்றும் தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். தலைமையகத்தில் இன்று நடைபெற்ற கலந்துரையாடலில், அண்மையில் இடம்பெற்ற தன்னுடைய கைது மற்றும் சமகால அரசியல் தொடர்பாக கட்சி செயற்பாட்டாளர்களுக்கு தெளிபடுத்தும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும், மாற்றம் பற்றிய எதிர்பார்ப்புடன் வாக்களித்த மக்களுக்கு இதுவரையில் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத நிலையே தொடருகின்ற போதிலும், பல்வேறு சவால்கள் மிகுந்த சூழலில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள அரசுக்கு இன்னும் கால அவகாசம் வழக்க வேண்டும் என்பதே நியாயமான நிலைப்பாடாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எந்தவொரு அரசும் தமிழ் பேசும் மக்களுக்கு எதையும் தாம்பாளத் தட்டில் ஏந்தி வந்து தாமாகத் தரப்போவதில்லை. எமது நண்லெண்ண சமிஞ்ஞையாலும் சிநேகபூர்வ உரையாடலாலும்

தேசிய நல்லிணக்க வழிநின்றே நாமே எதையும் பெற வேண்டும்.

கடந்த கால அரசுகளும் நாம் கேட்டதற்கிணங்கவே பலவற்றுக்கும் தீர்வு தந்தார்கள். கடந்த காலங்களில் போதிய அரசியல் பலம் எமக்கு இருந்திருந்தால் முழுமையாக எதையும் பெற்றிருக்கலாம்.

கடந்த கால அரசுகளோடு நாம் ஆட்சிகளில் பங்கெடுத்திருந்தாலும் அவர்களோடும் எமக்கு முரண்பாடுகள் இருந்தன. ஆனாலும் பேசித் தீர்ப்பதற்கு ஒரு தளம் இருந்தது. நாம் ஆட்சிகளில் பங்கெடுத்தமையே அந்தத் தளம்.

கடந்த கால அரசுகளைப் போலவே இந்த ஆட்சியோடும் எமக்கு முரண்பாடுகள் உள்ளன. ஆனாலும் எதிர்ப்பு அரசியல் நடத்துவோரைப் போல் நாமும் அரசைக் கடும்போக்கில் விமர்சிக்க முடியாது.

இந்த அரசும் தமிழ் பேசும் மக்களுக்கு எதையும் தரவில்லையென்றால் அதற்கு இந்த அரசு காரணம் என்று கூறிவிட முடியாது.

கடந்த கால அரசுகளோடு நாம் எவ்வாறு கேட்டுப் பெற்றோமோ, அது போலவே இந்த அரசுடனும் பேசியே பெற வேண்டும்.

ஆளும் கட்சி சார்ந்த தமிழ் எம்.பிக்கள் அரசுக்குள் கரைந்தேபோயுள்ளனர். அவர்களுக்கு அந்த ஆற்றல் அனுபவம் அக்கறை கிடையாது.

அரசின் நிகழ்ச்சி நிரலுக்குள்ளேயே ஆளும் கட்சி தமிழ் எம்.பிக்கள் தவிர்க்க முடியாமல் நிற்பார்கள். ஆகவே, நாமே அரசுடன் பேச வேண்டும்.

அதற்கு எமக்குப் பிரதிநித்துவம் இல்லை. அரசோடு பேச வல்ல அதிகாரம் இல்லை.

எதிர்காலத்தில் எமது மக்கள் அந்த ஆணையை வழங்கும் பட்சத்தில் இந்த அரசுடனும் நாம் எதையும் பேசித் தீர்க்கும் தளம் உருவாகும் என்று தெரிவித்தார்.

மேலும், கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தி கட்சி கட்டமைப்புக்களை சீராக்குவதுடன் எங்களுடைய பலவீனங்களை அடையாளப்படுத்திச் சீர்செய்வதன் மூலம் கட்சியை எழுர்ச்சி கொள்ள வைக்க முடியும். அதற்காக அனைத்து உறுப்பினர்களும் ஆத்மார்த்தமாக உழைக்க வேண்டும்.” – என்றார்.

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் இராசமாணிக்கத்தின் 113 ஆவது ஜனன தின நிகழ்வு!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் சி.மு. இராச மாணிக்கத்தின் 113 ஆவது ஜனன தின நிகழ்வு இன்று மட்டக்களப்பு – களுவாஞ்சி குடியில் அமைந்துள்ள சி.மு. இராச மாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவர்

தொடர்ச்சி▼














# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் இராசமாணிக்கத்தின் 113 ஆவது ஜனன தின நிகழ்வு!

தொடர்ச்சி▲

சி.வி.கே.சிவஞானம், பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், இரா.சாணக்கியன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகர மற்றும் பிரதேசக் கிளை முதல்வர், தவிசாளர்கள், கட்சி உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள், இளைஞர்கள் மற்றும் ஊர்ப் பெருமக்கள் கலந்துகொண்டனர்.

அமரரின் அரசியல் பயணம், தமிழர் நலனுக்காக அவர் செய்த அர்ப்பணிப்பு சேவைகள் மற்றும் அவரது மக்கள் நேசம் அனைவராலும் நினைவுகூரப்பட்டது.























நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வரவேற்கத்தக்க முடிவு

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வித் துறையில் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவது தொடர்பாக அறிவிப்பு ஒன்று வெளியாகியுள்ளது.

அதன்படி, இந்தச் சீர்திருத்தங்கள் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைக் கோர கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி தொடர்பான கொள்கை வகுப்புக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்திருக்கின்றார்.

நல்ல முடிவு. வரவேற்கத்தக்க அணுகுமுறை.

பொது மக்களின் கருத்துக்களைக் கோரிப் பெறுவதோடு அடங்கிவிடுவது அர்த்தமற்றது. அந்தக் கருத்துகள், ஆலோசனைகள் தொகுக்கப்பட்டு, அந்த ஆலோசனைகள் குறித்து தீவிரமாக ஆராயப்பட வேண்டும். மக்கள் மன்றில் கருத்துக்களை உள்வாங்கி, அலசி ஆராய்ந்து, பயனுள்ள முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக உயர் கல்வி தொடர்பான அறிஞர்கள், புத்திஜீவிகளின் கருத்துக்கள் உள்வாங்கப்பட வேண்டும். முன்னணி நாடுகளின் முறைமைகள் பற்றி ஆராய வேண்டும்.

முடிவில் வெள்ளை அறிக்கை ஒன்றைத் தயாரித்து, உத்தேச சீர்திருத்தங்கள் குறித்து பகிரங்க ஆய்வுக்கு இடமளிக்க வேண்டும். அதன் பின்னரே விவகாரம் நாடாளுமன்றுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

இதுதான் சரியான நடைமுறை. 1980 களின் ஆரம்பத்தில் கல்விச் சீர்த்திருத்தம் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட போது இந்த முறைமை அணுகப்பட்டது.

ஆனால், தற்போதைய பாடசாலைக் கல்விச் சீர்திருத்தம் தொடர்பான விடயங்களில் இந்த முறைமை பின்பற்றப்படவில்லை என்பதுதான் பல குழப்பங்களுக்கும் காரணம். இந்த விவகாரங்களில் நேரடியாக பங்களிக்கக் கூடிய பிரதான தரப்புகளின் கருத்துக்கள் கூட செவிமடுக்கப்படவில்லை, உள்வாங்கப்படவில்லை என்பதுதான் தற்போதைய கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற பிரதான குற்றச்சாட்டாகும்.

ஆட்சி அதிகாரத்திற்கு வந்துவிட்டமையால் மட்டும் நாட்டின் நடைமுறைகளைத் தீர்மானிக்கும் தனித்துவ உரிமையும் எதிர்காலத்தை முடிவு செய்யும் - விடயங்களைக் கையாளும் - தனித்துவமும் தங்களுக்கு மட்டுமே உரியதென்று அதிகார தரப்பு எண்ணக்கூடாது. அத்தகைய எண்ணத்திலேயே தற்போதைய பாடசாலைக் கல்விச் சீர்திருத்தம் முன்னெடுக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இதுவே இப்போதைய பிரச்சினைகளுக்குப் பிரதான அடிப்படையாகும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி துறையில் மேற்கொள்ளப்படவிருக்கும் சீர்திருத்தங்கள் தொடர்பாக இத்தகைய எதேச்சாதிகாரப் போக்குகளிலிருந்து விலகி, சகல தரப்புகளினதும் கருத்துக்களை உள்வாங்கி தீர்மானம் எடுக்கும் போக்கு ஆரோக்கியமானது. வரவேற்கத்தக்கது.

# அரசியல் தலைவர்கள் தூக்கிப்போடு எலும்பு துண்டுகளுக்கு எடுபடும் ஆள் நானில்லை; பதவிகளும் எனக்குப் பெரிதல்ல!

## புரட்சி கர மக்கள் சக்தியின் செயலாளர் நாயகம் அனுஷா சந்திரசேகரன் தெரிவிப்பு




**(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)**

நாட்டில் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள புதிய கல்வி சீர்திருத்தம் என்பது வரவேற்க கூடிய விடயம். கல்வி சீர்திருத்தம் என்பது ஒவ்வொரு நாட்டுக்கும் தேவையான விடயமாகும். ஆனால், புதிய கல்விச் சீர்திருத்தத்தை உள்வாங்கும் அளவில் எங்களுடைய பாடசாலைகளில் அதற்கான தரம் காணப்படுகிறதா?

இவ்வாறு என புரட்சி கர மக்கள் சக்தியின் செயலாளர் நாயகம் அனுஷா சந்திரசேகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை ஹட்டனில் இடம்பெற்ற ஊடகவியாலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே, அவர் இதனை தெரிவித்தார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அனுஷா சந்திரசேகரன்,

மலையகத்தில் இயங்குகின்ற சில பாடசாலைகளில் கணனி வசதிகள் கூட குறைவாகவே காணப்படுகிறது. போக்குவரத்து வசதிகள் இல்லாத பாடசாலைகளும் காணப்படுகின்றன.இங்குள்ள பாடசாலையில் விஞ்ஞான துறை குறைவாகவே காணப்படுகிறது. இதுபோன்ற விடயங்களில் நாம் பின் தங்கி இருக்கின்றோம். இதேவேளை, இவற்றை அனைத்தும் தரம் உயர்த்தப்பட வேண்டும். ஆறு லட்சத்துக்கும் மேல் மக்கள் வாழும் இந்த மாவட்டத்தில் ஒரு பல்கலைக்கழகம் கூட கிடையாது. இந்த அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்த பின் புதியதொரு கல்விச் சீர்திருத்தம் கொண்டுவருவது வரவேற்கக் கூடியதாக இருக்கும்.

எமது கட்சி இதுவரை காலம் நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் இயங்கி வந்தது. இனிவரும் காலங்களில் நாடளாவிய ரீதியில் இயங்கும். தலவாக்கலை மண்ணில் இரண்டாவது தடவையாக இந்தப் புரட்சி கர மக்கள் சக்தி உருவாகியிருக்கிறது. முதலாவதாக உருவாக்கப்பட்ட கட்சி எனது தந்தை உருவாக்கிய மலையக மக்கள் முன்னணியாகும். எனது தந்தை இருந்த காலப் பகுதியில் மக்களுக்கு எவ்வளவு சேவைகளை முன்னெடுத்ததோ அதேபோல் இந்த புரட்சி கர மக்கள் சக்தியும் மக்களுக்கான சேவையை முன்னெடுக்கும். எமது கட்சியில் ஏற்றதாழ்வு கிடையாது. சகலருக்கும் சம உரிமை வழங்கப்படும்.

மலையக மக்கள் முன்னணியால் அதிகாரமற்ற பதவி எனக்கு வழங்கப்பட்டது. பிரதிச் செயலாளர் நாயகம் என்ற பதவி எனது தேர்தலுக்கு பின்னர் மலையக மக்கள் முன்னணியின் உறுப்புரிமையில் இருந்தும் இந்த பிரதி செயலாளர் நாயகம் பதவியில் இருந்தும் என்னை நீக்கினார்கள். கட்சியில் பதவி வெறிபிடித்து அலையும் நபர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஏமாற்றுக் காரார்கள் இருக்கிறார்கள். ஊழல்வாதிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு வேண்டுமானால் இந்த அதிகாரமற்ற பிரதி செயலாளர் நாயகம் பதவி பெரிதாக இருக்கலாம்.

அரசியல்தலைவர்கள்தூக்கிப்போடும் எலும்பு துண்டுகளுக்கு இந்த பதவி பெரிதாக இருக்கலாம் 1994 ஆம் ஆண்டு அரசியலைப் புரட்டி போட்ட உலகறிந்த தலைவர் அமரர் சந்திரசேகரனின் அரசியலை சிறுவயதில் இருந்தே பார்த்து வளர்ந்திருக்கின்றேன். அவருடைய உரையை நான் கேட்டிருக்கிறேன். அவருடைய கொள்கைகளை நான் உள்வாங்கி இருக்கின்றேன். எனது உடம்பில் தந்தை சந்திரசேகரின் இரத்தம் ஓடுகிறது. ஆகவே எனக்கு கட்சியின் பதவிகள் ஒன்றும் பெரிதல்ல.

மாகாணசபை தேர்தல் எப்போது இடம்பெறும் என்பதை அறிவிக்க வேண்டும். எந்த முறையில் வரும் என்பதை தெளிவுபடுத்த பட வேண்டும். பழைய முறைமை இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. மாகாண சபை தேர்தல் வரும் பொழுது எங்களுடைய தீர்மானத்தை நாங்கள் அறிவிப்போம். எந்த ஒரு அரசுக்கும் கட்சிகளுக்கும் நாங்கள் எதிரானவர்கள் அல்ல. இதற்கு முன்னர் இருந்த அரசியல் தலைமைகள் எதுவும் செய்யவில்லை என கூறி புதிய ஒரு அரசை மக்கள் கொண்டுவந்தனர். இந்த புதிய அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என நாங்கள் நம்புகிறோம். நிலையான வேலைத்திட்டங்களை இந்த அரசு முன்னெடுக்க வேண்டும்.– என்றார்.

# பாரவூர்தி - ஓட்டோ விபத்து: ஓட்டோச் சாரதி உயிரிழப்பு!

## பரந்தனில் சோகம்

கிளிநொச்சி – பரந்தன் பகுதியில், பாரவூர்தியும் ஓட்டோவும் நேருக்குநேர் மோதி விபத்துக்கு உள்ளானதில் ஓட்டோச் சாரதி சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

பரந்தன் ஏ – 35 பிரதான வீதியில், காளிகோயிலுக்கு அருகாகவே இந்த விபத்து இடம்பெற்றது.

அக்கரைப்பத்தனைப் பகுதியைச் சேர்ந்த கருப்பையா ராஜகுமாரன் (வயது 45) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

முல்லைத்தீவில் இருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த பாரவூர்தியும், பரந்தனில் இருந்து விசுவமடு பகுதியை நோக்கிப் பயணித்த ஓட்டோவுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# ஹட்டன் நகரில் நகைக் கடையில் திருடிய சந்தேக நபர் கைதானார்!

(க.கிஷாந்தன்)

ஹட்டன் நகரிலுள்ள ஒரு நகைக் கடையிலிருந்து 2 லட்சத்து 89 ஆயிரம் ரூபா மதிப்புள்ள தங்க நெக்லஸை திருடிச்சென்ற சந்தேக நபர், ஹட்டன் பொலிஸ் தலைமையக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால்நேற்று இரவு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், ஹட்டன் நீதிவான் எஸ். ராம்மூர்த்தி முன்னிலையில் (25) ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, அவரை இந்த மாதம் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

பொகவந்தலாவ பொலிஸ் நிலையப் பிரிசுவுக்கு உட்பட்ட கிவ் தோட்டத்தின் மேற்பகுதியில் வசிக்கும், 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்வராஜ் வீரய்யா ராதாகிருஷ்ணன் என்பவரே கைது செய்யப்பட்ட நபர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹட்டன் தலைமையக தலைமை பொலிஸ் அதிகாரி கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், சந்தேக நபர் பொகவந்தலாவ கிவ் தோட்டத்தில் உள்ள அவரது மனைவியின் வீட்டில் மறைந்திருந்தது உறுதி செய்யப்பட்டது. அதன்பேரில், ஹட்டன் பொலிஸ் தலைமையக குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், தலைமையக தலைமை பொலிஸ் அதிகாரி தலைமையில் சோதனை நடத்தி அவரைக் கைது செய்தனர்.

மேலும், சந்தேக நபர் தங்க நெக்லஸ/டன் ஹட்டன் முதல் வட்டவளைவரை ரயில் பாதையோரமாக நடந்து சென்று, பின்னர் நாவலப்பிட்டியிலுள்ள தனியார் நிதி நிறுவனமொன்றில் அந்த நகையை ஒரு லட்சத்து 69 ஆயிரம் ரூபாவுக்கு அடகு வைத்து பணம் பெற்றுள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

பெறப்பட்ட பணத்தில் ஒரு பகுதியை கொழும்பில் கல்வி பயிலும் தனது மகனுக்கும், மீதமுள்ள தொகையில் ஒரு பகுதியை கடனாளர்களுக்கு வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்படும் போது சந்தேக நபரிடமிருந்து 10 ஆயிரம் ரூபா மட்டுமே மீட்கப்பட்டதாக ஹட்டன் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

# மாங்காய் வடிவிலான இலங்கை வரைபடத்தை முந்திரி விதை போன்று மாற்ற வேண்டாம்!

## இலங்கை ஜனநாயக முன்னணியின் தலைவர் ஆதங்கம்

(அபு அலா)

நாட்டை யுத்தத்திலிருந்து பாதுகாப்பதிலும், அனர்த்தங்களில் இருந்து மக்களை காப்பாற்றுவதும் இதுபோன்று நாட்டின் கரையோரப் பிரதேசங்களை கடலரிப்பிலிருந்து பாதுகாப்பதும், தடுப்பதும் அரசின் தலையாய கடமையாகும் என்று இலங்கை ஜனநாயக முன்னணியின் தலைவர் ஏ.பி.கமால்டீன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட மாளிகைக்காடு கரையோர பிரதேசத்தில் அமைந்துள்ள முஸ்லிம் மையவாடியும் அதனை அண்டியுள்ள மஸ்ஜிதுல் அந்நூர் ஜும்ஆ பள்ளிவாசலும் சுமார் 75 வருடங்களுக்கு முன்பே அமையப்பெற்றன. அந்த மையவாடி கடல் அரிப்பால் காவுகொள்ளப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட ஜனாஸாக்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. அதுமட்டுமின்றி வீடுகள், பாதைகள், மதஸ்தானங்கள், பாடசாலைகள், மீனவர் இல்லங்கள், மீன் பதனிடும் நிலையங்கள் தினந்தோறும் அழிக்கப்பட்டும் வருகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை ஜனநாயக முன்னணியின் அட்டாளைச்சேனை தலைமை அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,





மாளிகைக்காடு முஸ்லிம் மையவாடி பிரதேசம் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியாலும், ஒலுவில் துறைமுகம் அமையப்பெற்றதாலும் துறைமுகத்துக்கு வடக்கே ஒலுவில், நிந்தவூர், காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனைவரையிலுள்ள கடலோரப் பிரதேசங்கள் தாழமுக்கம் காரணமாக ஏற்படும் கடல் சீற்றத்தால் வருடாவருடம் இராட்சத அலையால் பாரிய பாதிப்புக்குள்ளாகின்றன. இதைத் தடுப்பதற்கான உடனடி நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ அரசால் சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பை கடல் எல்லைக்குள் மண் நிரப்பி துறைமுக நகரம் அமைக்க முடியுமென்றால் ஏன் இப்பிரதேச கடலரிப்பை பாரிய கற்களைப்போட்டு தடுத்து நிறுத்த முடியாது.

இவ்விடயத்துக்கு மிக விரைவில் ஆக்கபூர்வமான நடவடிக்கையை அரசும், அது சார்ந்த அதிகாரிகளும் கூடிய கவனம் செலுத்தி எடுக்க வேண்டும். இலங்கையின் கரையோரப் பிரதேசத்தையும் இலங்கையின் பூகோள வரைபடத்தின் ஸ்திரத் தன்மையையும் பாதுகாக்க முன்வரவேண்டும்.

இதை அரசு கண்டுகொள்ளாமல் கடந்து செல்லுமாக இருந்தால் எதிர்காலத்தில், மாங்காய் வடிவிலான இலங்கையின் வரைபடம் முந்திரி விதை போன்று ஆகிவிடும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.– என்றார்.



# செம்பியன் பற்று வடக்கில் சாதனை மாணவர் கௌரவிப்பு

(பூ.லின்ரன்)

செம்பியன் பற்று வடக்கில் சாதாரண தரம் மற்றும் உயதர பரீட்சைகளில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

செம்பியன் பற்று வடக்கு புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் இன்று காலை செம்பியன் பற்று வடக்கு பகுதியில் இருந்து சாதாரண தரம் மற்றும் உயர் தர பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் சிறிய தொகை பணமும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வானது இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை கிழமை வாரத் திருப்பலியை தொடர்ந்து செம்பியன் பற்று பங்கு தந்தை ஜஸ்டின் ஆதர் தலைமையில் இடம் பெற்றது.



இந்த நிகழ்வில் செம்பியன் பற்று வடக்கு பங்கு மக்கள், இளைஞர்கள், அருட் சகோதரி என பலரும் கலந்து கொண்டனர்

# பசறையில் பொங்கல் விழா!





(நடராஜா மலர்வேந்தன்)

பசறை, தமிழ் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் ஒன்றியம் பாடசாலை நிர்வாகத்தோடு இணைந்து ஏற்பாடு செய்த பொங்கல் விழா “பாரம்பரிய கலா சாரத்தினை இளைய தலைமுறையினரிடம் கையளிப்போம்” என்ற தொனிப் பொருளில் நேற்று பாடசாலை அதிபர் கே.எம்.சி. பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பொங்கல் நிகழ்வுடன் பாடசாலை மாணவர்களி கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



# வடக்கில் ஆயிரம் பெண் தலைமை குடும்பங்களுக்கு வறுமையை ஒழிக்க வாழ்வாதார உதவித் திட்டம்!

## கிளிநொச்சியில் முதற்கட்டமாக ஆரம்பம் என்கிறார் ஜெயசேகரம்

வடக்கு மாகாணத்தில் ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டம் ஒன்றை சிங்கப்பூரைச் சேர்ந்த புலம்பெயர் தமிழ் குடும்பத்தினர் வழங்க முன்வந்துள்ளனர்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் யாழ். வணிகர் கழக முன்னாள் தலைவருமான இ.ஜெயசேகரம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய வாழ்வாதார சவால்களை எதிர்கொண்டுள்ள சுமார் 1000 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் முதல் கட்ட நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமையன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் சு.முரளிதரனின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் 181 பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தக் கூடிய வகையில் அவர்களுக்கு ஏற்ற வாழ்வாதார பொறிமுறைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

கடந்தகால போர்சூழ்நிலை காரணமாகவும், அண்மையில் ஏற்பட்ட புயல் அனர்த்தம் காரணமாகவும் பாதிக்கப்பட்ட பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கு இந்த உதவித் திட்டம் வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் அவர்களின் குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைத் தரம் மேம்பட உதவும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்தத் திட்டத்துக்கான நிதிப் பங்களிப்பை சிங்கப்பூரைச் சேர்ந்த ரி.ரி.துரை தம்பதிகள், மற்றும் சரசீஜா ராமன் உள்ளிட்டோர் வழங்க முன்வந்துள்ளனர்.

இலங்கையில் அதிக வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாவட்டங்களில் முதலிடத்தில் கிளிநொச்சி, இரண்டாவது இடத்தில் முல்லைத்தீவு, ஐந்தாவது இடத்தில் மன்னார் மற்றும் பதினொன்றாவது இடத்தில் வவுனியா ஆகிய மாவட்டங்கள் உள்ளதாக அறிகிறோம். அந்த வகையில் உதவித் திட்டம் முதலில் கிளிநொச்சி, ரண்டாவது முல்லைத்தீவு, அதன் பின்னர் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் என்ற ஒழுங்கில் வழங்கப்படவுள்ளது. – என்றார்.

# தேசிய இலக்கிய விருது விழாவில் ஒலுவில் அதிபருக்கு இரு விருதுகள்






(எஸ்.அஷ்ரப்கான்)

புத்தசாசன சமய கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய இலக்கிய விருது வழங்கல் நிகழ்வு 2026 நேற்று பத்தரமுல்லையிலுள்ள சு/ஹருபாய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் இலங்கையின் இலக்கியத்துறைக்கு கால்பதிக்கும் படைப்பாளிகளில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டியவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்த விழாவில் கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், ஒலுவிலைச் சேர்ந்த அதிபர் ஜே.வஹாப்தீன் இரண்டு பதக்கங்களையும் பணப்பரிசிலையும் பெற்றுக் கொண்டார்.



# யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பொங்கல் விழா!

யாழ். பல்கலைக்கழக வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்தில், வியாபார முகாமைத்துவமானி வெளிவாரி 3 ஆம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் விழா இன்றையதினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பாரம்பரிய முறைப்படி கோலமிட்டு, தோரணம் கட்டி, பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள ஆலயத்துக்கு முன்பாக பொங்கல் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பொங்கல் நிறைவுற்றதும் சூரியனுக்கு படையல் வைத்து, பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்த பொங்கல் விழாவில் வியாபார முகாமைத்துவமானி முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் அணி மாணவர்கள் கலந்து கொண்டனர்.


















# டித்வா அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம்

டித்வா அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று காலை யாழ். நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டகத்தில் இடம்பெற்றது.

இந்தியா, தமிழ்நாடு வேலூர் ரோட்டறி சங்கம் மற்றும் இராணிப்பேட்டை ராம் லெதர்ஸ் நிதியுதவியில் யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ். விஜயகாந்தின் ஏற்பாட்டில் மாணவர்களுகான இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் இந்தியா, தமிழ்நாடு வேலூர் ரோட்டறி சங்கம் மற்றும் இராணிப்பேட்டை ராம் லெதர்ஸ் ஆகியவற்றைச் சேர்ந்த என். பாஸ்கரன் மற்றும் கே. பாரத், நல்லூர் சங்கிலியன் மன்றத் தலைவர் டாக்டர் கே. ஜனகன், ஓய்வுநிலை கிராம சேவகர் இ. சந்திரகுமார், யாழ். மாநகரசபை உறுப்பினர் திருமதி சுகிர்தராஜ் சரஸ்வதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் 150 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், புத்தகப் பைகள் என்பன வழங்கப்பட்டன.
















# உலக தொழுநோய் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருதில் விழிப்புணர்வு நடைபவனி!

2026ஆம் ஆண்டில், உலக தொழுநோய் தினம் ஜனவரி 25 ஆகும். இதனை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை இந்தத் தினம் அனுஸ்டிக்கப்படுகிறது.

தொழுநோய் தொடர்பான சரியான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதும், இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் சமூகப் புறக்கணிப்பை ஒழிப்பதும் இதன் பிரதான நோக்கமாகும்.

அந்தவகையில், உலக தொழுநோய் தினத்தை முன்னிட்டுக் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றா நோய் தடுப்பு பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நடைபவனியும் கருத்தரங்கும் நேற்று சாய்ந்தமருதில் இடம்பெற்றன.

“தொழுநோயை ஒழிக்க கைகோர்ப்போம்” எனும் கருப்பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம். லபீர், தொழுநோய் தடுப்பியக்க பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.ஐ.எம்.அர்சாத், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் பிரதேச வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், உலமாக்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பமான விழிப்புணர்வு நடைபவனி, பிரதான வீதியூடாகச் சென்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சென்றடைந்தது. நடைபவனியில் கலந்து கொண்டவர்கள் தொழுநோயை முடிவுக்கு கொண்டு வாருங்கள், நோயாளிகளுக்கு களங்கம் ஏற்படுத்தாதீர்கள், தொழுநோயுக்கான இலவச சிகிச்சை அரச வைத்தியசாலைகளில் வழங்கப்படுகிறது, ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் ஊனத்தைத் தடுக்கலாம், தொழுநோயை முடிவுக்கு கொண்டுவர ஒன்றாக நடப்போம் எனும் சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடைபெற்றது. இதன்போது தொழுநோய் தொடர்பாகவும் அதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் சிகிச்சைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

விழிப்புணர்வு நடைபவனியின் போது பொதுமக்களுக்குத் தொழுநோய் தொடர்பான தகவல்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.









# அரசின் வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் இளைஞர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு

## பிரதமர் மோடி தெரிவிப்பு

திறமையான இளைஞர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாய்ப்புகளை வழங்கும் வகையில் மத்திய அரசு, பல்வேறு நாடுகளுடன் வர்த்தகம் மற்றும் இடப்பெயர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

18 ஆவது வேலைவாய்ப்புத் திருவிழாவின் கீழ் மத்திய அரசின் பல்வேறு துறைகள் மற்றும் அமைப்புகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 61,000 இற்கும் அதிகமான இளைஞர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. இதில், காணொலிக்காட்சி மூலம் பங்கேற்று நியமனக் கடிதங்களை வழங்கினார் பிரதமர் நரேந்திர மோடி.

இதன்போது அவர் உரையாற்றுகையில்,

“உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இளைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்க அரசாங்கம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நாட்டின் திறமையான இளைஞர்களுக்கு வாய்ப்புகளை வழங்கும் வகையில், மத்திய அரசு பல்வேறு நாடுகளுடன் வர்த்தகம் மற்றும் இடப்பெயர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறது.

நாட்டின் பொருளாதாரம் தற்போது வலுவடைந்திருக்கிறது. பத்தாண்டுகளுக்குள் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியை (ஜி.டி.பி) இரட்டிப்பாக்கிய உலகின் ஒரே பொருளாதாரம் இந்தியாதான். இன்று, 100 இற்கும் மேற்பட்ட நாடுகள் அந்நிய நேரடி முதலீடு மூலம் இந்தியாவில் முதலீடு செய்கின்றன. 2014 இற்கு முந்தைய பத்தாண்டுகளுடன் ஒப்பிடும்போது அந்நிய நேரடி முதலீட்டு வரவு 2.5 மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது. இந்த அந்நிய முதலீட்டின் வரவு, இளைஞர்களுக்கு எண்ணற்ற வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருகிறது.

“ஜன கண மன“ பாடலை தேசிய கீதமாகவும், “வந்தே மாதரம்” பாடலை தேசியப் பாடலாகவும் அரசியல் சாசனம் அங்கீகரித்த நாள் ஜனவரி 24. வேலைவாய்ப்புத் திருவிழா ஒரு நிறுவனமாக மாறியுள்ளது. இதுவரை லட்சக்கணக்கான இளைஞர்கள் பல்வேறு அரசுத் துறைகளில் இருந்து பணி நியமனக் கடிதங்களைப் பெற்றுள்ளனர்.

இன்று வினியோகிக்கப்பட்ட பணி நியமனக் கடிதங்கள் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக உங்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அழைப்பு. வளர்ந்த இந்தியாவை நோக்கி இளைஞர்களை வழிநடத்துவதற்கான ஒரு சங்கல்ப பத்திரம்.” என்று தெரிவித்தார்.



# ஜல்லிக்கட்டு விதிகளில் தளர்வுகளை முதல்வர் அறிவித்தமை வாக்கு அரசியல்

## ஜல்லிக்கட்டு ராஜேஷ் குற்றச்சாட்டு



ஜல்லிக்கட்டு விதிகளில் தளர்வுகள் தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்புகள் அனைத்தும் வாக்கு அரசியலுக்காகவே என தமிழர் வீர விளையாட்டு மீட்புக் கழகம் மாநிலத் தலைவர் ஜல்லிக்கட்டு ராஜேஷ் குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழர் வீர விளையாட்டு மீட்புக் கழகம் மாநிலத் தலைவரும், நா.த.க. மாநில நிர்வாகியுமான ஜல்லிக்கட்டு ராஜேஷ் திருச்சியில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“ஜல்லிக்கட்டு போட்டிக்கு பெரும் சிக்கலான ஒன்லைன் டோக்கன் முறை ரத்து, மாடுபிடி வீரர்களுக்கு காப்பீடு வசதி தேவை இல்லை, ஜல்லிக்கட்டு நடத்தும் விழா கொமிட்டியினருக்கு முத்திரைத் தாளில் பெறப்பட்டு வந்த உறுதிமொழி பத்திரம் ரத்து, இந்த அறிவிப்பினை வெளியிட்ட தமிழக அரசுக்கு நன்றி.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்ற பிறகுதான் இந்த அறிவிப்பு வந்தது. அப்போது, மாடுபிடி வீரர்களுக்கு கால்நடைத் துறையில் அரசு வேலை தருவதாகவும், அலங்காநல்லூரில் 2 கோடி இந்திய ரூபாவில் உயர்தர சிகிச்சை மையம், பயிற்சி மையம் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்து நான்கு ஆண்டுகளுக்கும் மேல் கடந்து விட்டது. இன்னும் 2 மாதம்தான் இருக்கிறது. இந்த 2 மாதத்தில் தமிழக முதல்வர் அறிவிப்பை எப்படி நடைமுறைப்படுத்துவார்கள். திரும்ப ஆட்சிக்கு வந்தால் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும். தேர்தல் வருவதை முன்னிட்டு ஜல்லிக்கட்டு வீரர்களுக்கு முதல்வர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

செயல்படுத்த முடியாத விஷயத்தை எப்படி நடைமுறைப்படுத்த முடியும்? கடந்த தேர்தலின்போது தி.மு.க. தேர்தல் அறிக்கையில் ஜல்லிக்கட்டு காளை வளர்ப்போருக்கு மாதம் 1,000 ரூபா வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. இதுவரை அது நிறைவேற்றவில்லை.

ஜல்லிக்கட்டை அரசு போட்டியாக மட்டுமே பார்க்கிறது. கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் மீட்டெடுக்க எவ்வளவு போராட்டம் நடத்தினோம் என்பது எங்களுக்குத் தான் தெரியும். இதற்கு நன்றி தெரிவிக்கும் பல அமைப்புகள், ஏன் 1,000 ரூபா பற்றி கேள்வி எழுப்பவில்லை. ஏனென்றால் முழுக்க முழுக்க அரசியல் மட்டும் தான் இருக்கிறது. நல்ல நோக்கம் இருந்தால் தேர்தலுக்கு 2 மாதத்துக்கு முன்பு முதல்வர் அறிவிக்க வேண்டிய அவசியம் என்ன? ஏன் இத்தனை ஆண்டுகளாக இதை செய்யவில்லை?

ஜல்லிக்கட்டு நலன் கருதி முதல்வர் எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை. முதல்வரின் அறிவிப்புகள் அனைத்தும் வாக்கு வங்கி அரசியலுக்காக கொடுத்த வாக்குறுதியேத் தவிர வேறு எதுவும் இல்லை.” என்று தெரிவித்தார்.

# திருமலை கலப்பட நெய் விவகாரம்: 24 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை



திருப்பதி ஏழுமலையான் லட்டில் கலப்படம் செய்த விவகாரத்தில் 24 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை, ஜெகன் மோகன் ரெட்டியின் ஆட்சியில் கலப்பட நெய்யால் பிரசாதங்கள் தயாரிக்கப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டதாக புகார் எழுந்தது.

சந்திரபாபு நாயுடு அரசு ஆட்சிக்கு வந்ததும் சி.பி.ஐ. விசாரணை தொடங்கியது. சி.பி.ஐ. இணை இயக்குனர் விரேஷ் பிரபு, டிஐஜி முரளி ராம்பா உட்பட 30 பேர் கொண்ட குழு 15 மாதங்களாக இந்த வழக்கை விசாரித்தது. ஆந்திரா உட்பட 12 மாநிலங்களில் புலனாய்வு குழு அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

முதலில் தமிழகத்தில் இருந்துதான் கலப்பட நெய் கொள்முதல் செய்யப்பட்டிருக்கலாம் என நினைத்து விசாரணையை தொடங்கினர். ஆனால், இதற்கு முக்கிய காரணம் போலேபாபா ஆர்கானிக் பால்பொருள் தயாரிப்பு நிறுவனம்என்பதும், இதற்குபலர்உடந்தையாக இருந்துள்ளனர் என்பதும் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

ஆதலால், போலே பாபா பால் பொருள் தயாரிப்பு நிறுவனத்தை சேர்ந்த இயக்குனர்கள் போமில் ஜெயின், வி.பி. என். ஜெயின் ஆகியோரை சி.பி.ஐ. புலனாய்வு குழு கைது செய்துள்ளது.

மேலும், ஆந்திரா உட்பட 12 மாநிலங்களை சேர்ந்த பலர் இதற்கு உடந்தையாக இருந்துள்ளனர் என்றும் சி.பி.ஐ. புலனாய்வு குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. முதல் குற்றப்பத்திரிகையில் 24 பேர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

# உயர் தலைவர் அலி கமேனி பதுங்கு குழியில் ஒளியவில்லை

## ஈரான் தூதரக அதிகாரி தகவல்



ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் மற்றும் அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு மத்தியிலும், அந்நாட்டின் உயர் தலைவர் அலி கமேனி பதுங்கு குழியில் ஒளியவில்லை என்று மும்பையிலுள்ள ஈரான் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவை தளமாக கொண்டு இயங்கும் ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஈரானில் நடந்து வரும் போராட்டங்கள் வெளிநாட்டு உளவு அமைப்புகளால் தூண்டிவிடப்பட்டவை என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

வன்முறை சம்பவங்களில் மொத்தம் 3,117 பேர் உயிரிழந்துள்ளனர் என அவர் தெரிவித்தார்.

இதில் 2,427 பேர் பொதுமக்கள் மற்றும் பொலிஸார் என்றும் 690 பேர் தீவிரவாதிகள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுப் பயிற்சி பெற்ற நபர்களே நகரங்களில் சேதங்களை ஏற்படுத்தினர் என்றும் தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் அவர் கூறினார்.

ஈரான் உயர் தலைவர் அலி கமேனி பொதுவெளியில் தோன்றாமல் பதுங்கு குழியில் இருக்கின்றார் என கூறப்படும் தகவல்களை அவர் மறுத்துள்ளார்.

“அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது உண்மைதான், ஆனால் அவர் பதுங்கு குழியில் ஒளியவில்லை. அனைத்து முக்கியக் கூட்டங்களையும் அவர் காணொளி காட்சி வாயிலாக நடத்தி வருகிறார்,” என்று விளக்கமளித்துள்ளார்.

வெளிநாட்டுத் தலையீடுகளைக் கட்டுப்படுத்தவே இணையச் சேவை தற்காலிகமாக முடக்கப்பட்டதாகவும், சில நாள்களில் அது முழுமையாகச் சீரமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஈரானைத் தாக்க எந்த நாடு முயற்சி செய்தாலும், அதை எதிர்கொள்ளத் தங்கள் நாடு முழு பலத்துடன் தயாராக இருப்பதாக அவர் எச்சரித்துள்ளார்.

# அமெரிக்காவின் மினியாபோலிஸில் மீண்டும் அதிகாரிகளின் துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலி!

## நூற்றுக்கணக்கானோர் திரண்டு ஆர்ப்பாட்டம்






அமெரிக்காவின் மினசொட்டா மாநிலத்தின் மினியாபோலிஸ் நகரில் சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்புத் திணைக்களத்தை சேர்ந்த ஃபெடரல் குடிவரவு அதிகாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் (வயது 51) உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் அமெரிக்காவில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்தையடுத்து, மினசோட்டா மாநில ஆளுநர் டிம் வால்ஸ், வெள்ளை மாளிகையுடன் அவசரப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மத்திய அதிகாரிகளால் நடத்தப்பட்ட மற்றுமொரு பயங்கரமான துப்பாக்கிச் சூடு இதுவென சாடியுள்ள அவர், வன்முறையில் ஈடுபடும் பயிற்சியற்ற ஆயிரக்கணக்கான அதிகாரிகளை மினசோட்டாவிலிருந்து உடனடியாக வெளியேற்றுமாறு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு கடுமையாக எச்சரித்துள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட இடத்தைச் சுற்றி நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் திரண்டுள்ளனர். அங்கு போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடும் முறுகள் ஏற்பட்டுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாத தொடக்கத்தில், ரெனீ குட் என்ற அமெரிக்கப் பெண்மணி ஒருவரும் குடிவரவு அதிகாரியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அந்தச் சோகம் மறைவதற்குள் மீண்டும் ஒரு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருப்பது பொதுமக்களிடையே பெரும் அச்சத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கனடா முரசு

பக்கங்கள் - 04

ஞாயிற்றுக்கிழமை 25/01/2026

‘அபாயகரமான குளிர்கால புயல் நிலைமைகள்’


## டொராண்டோவை இன்று முதல் தாக்கும்



C3

# கனடிய தமிழர் பேரவையின் அணுகுமுறை உரிமைகளை வெல்வதற்கு சாத்தியமானது

## ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு






எங்களது உரிமைகளை எப்படி வெல்வது என்பது சம்பந்தமான கனடிய தமிழர் பேரவையின் அணுகுமுறை சாத்தியமானது மட்டுமன்றி ஒரு காத்திரமான அடைவுகளையும் கொடுக்கக்கூடியது என்று ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கனடிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் டொரொண்டோவில் நடைபெற்ற தைப் பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எங்களுடைய புலம் பெயர் உறவுகள் கனடாவிலிருந்து எமது தாய் நாட்டில் சமாதானமும் சக வாழ்வும் தொடர்பான விவகாரங்களில் அவர்களின் தொழிற்பாடு தொடர்பாக எவ்வாறு செயற்படவேண்டும் என்பதற்கு முன்னோடியாக உள்ளனர்.

C2

# சீனாவுடன் ஒப்பந்தம் மேற்கொண்டால் கனடா மீது 100 வீதம் வரி விதிப்பேன்

## ட்ரம்ப் கடும் எச்சரிக்கை







சீனாவுடன் கனடா வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டால், அந்த நாட்டிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருள்கள் மீதும் 100 வீத வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தனது ‘ட்ரூத் சோஷியல்’ தளத்தில் பதிவிட்டுள்ள ட்ரம்ப், “கனடா சீனாவுடன் ஒப்பந்தம் செய்தால், உடனடியாக அமெரிக்காவுக்குள் வரும் அனைத்து கனேடியப் பொருள்கள் மற்றும் தயாரிப்புகள் மீது 100 வீத வரி விதிக்கப்படும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சீனப் பொருட்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கான ஒரு ‘இறங்குதுறை’ ஆகக் கனடாவைப் பயன்படுத்த பிரதமர் கார்னி நினைத்தால், அவர் மிகப்பெரிய தவறு செய்கிறார் என்றும் அவர் சாடியுள்ளார்.

சமீபத்தில் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றக் கூட்டத்தில் கனடா பிரதமர் மார்க் கார்னி ஆற்றிய உரை ட்ரம்ப்பை ஆத்திரமடையச் செய்துள்ளது.

C3

## கனடிய தமிழர் பேரவையின்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு உங்களுடைய தலைவரது உரையிலிருந்து இரண்டு வசனங்களை நான் மேற்கோள் காட்டுகிறேன். மோதிக் கொள்ளாமல் அழுத்தம் கொடுப்பது அதே நேரம் கண்ணியத்தோடு நினைவுகளை கொண்டாடுவது. இந்த இரண்டு விடயங்களும் நாட்டில் இருக்கும் உறவுகளுக்கு நிரந்தர சமாதானம் கொடுக்கும்.

இன்று சர்வதேச சமூகத்துக்கு முன்னால் ஜெனீவாவில் மனித உரிமைகள் செயலகத்தில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் சம்பந்தமான ஒரு தீர்மானம், கடந்த பல தசாப்தமாக இவ்வாறான பல தீர்மானங்கள் அரசுகளின் இணக்கத்தோடும், பிணக்கத்தோடும் நிறைவேற்றப்படுகின்ற நீண்ட பாரம்பரியத்தை பார்த்து வருகின்றோம். எப்படி இவற்றுக்கு முடிவு காண்பது. நிரந்தரமான அமைதியையும் அடைவது. எங்களது உரிமைகளை வெல்வது என்பது சம்பந்தமான கனடிய தமிழர் பேரவையின் இந்த அணுகுமுறை சாத்தியமான அணுகுமுறை மட்டுமன்றி ஓர் காத்திரமான அடைவுகளையும் கொடுக்கக்கூடிய என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகின்றேன்." என்று தெரிவித்தார்.






















# 'அபாயகரமான குளிர்கால புயல் நிலைமைகள்' டொராண்டோவை இன்று இரவு முதல் தாக்கும்




டொராண்டோ பகுதிகளில் கடும் குளிர் காற்றின் தாக்கம் தொடரும் நிலையில், இன்று ஞாயிற்றுக் கிழமை அபாயகரமான குளிர்கால புயல் நிலைமைகள் ஏற்படலாம் என எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால், பனிப்பொழிவை முன னிட்டு, தற்போது செம்மஞ்சள் நிற குளிர்கால புயல் எச்சரிக்கை அமலில் உள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களத் தின் தகவல் படி, செம்மஞ்சள் எச்ச ரிக்கை என்பது அரிதாக வழங்கப் படும் ஒன்று. இது கடுமையான வானிலை பெரும் சேதம், இடையூறு அல்லது சுகா தார பாதிப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளபோது வழங்கப்படுகிறது.

இந்த புயலின் தாக்கங்கள் பெரும் அளவில் மற்றும் பரவலாக இருக்கும் என்றும் சில நாள்கள் நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



**சீனாவுடன்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

கார்னி தனது உரையில் உலக வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கு எதிரா கப் பேசியிருந்தார்.

முன்னதாக, சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்குடன் கார்னி மேற்கொண்ட சந்திப்பின் போது, மின்சார வாகனங்கள் உட்பட பல்வேறு துறைகளில் வர்த்தக ஒப்பந்தம் எட்டப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

ஆரம்பத்தில் இதனை 'நல்ல விடயம்' என வரவேற்ற ட்ரம்ப், தற்போது அதற்கு எதிராகக் கடும் நிலைப்பாட்டை எடுத் துள்ளார்.

கடந்த ஆண்டு முதலே கனடாவுட னான உறவில் ட்ரம்ப் ஒருவித முரண்பட்ட போக்கைக் கடைப்பிடித்து வருகிறார்.

கனடாவை அமெரிக்காவின் "51-வது மாநிலம்" என்றும், மார்க் கார்னியை அதன் ஆளுநர் என்றும் கிண்டலாக அழைத்து வரும் ட்ரம்ப், ஒருகட்டத்தில் கனடாவையே முழுமையாகக் கைய கப்படுத்தப் போவதாகவும் குறிப்பிட்டி ருந்தார்.

கிரீன்லாந்தைக் கைப்பற்றும் ட்ரம்ப் பின் முயற்சி மற்றும் நேட்டோ தொடர் பான அவரது கருத்துக்கள் ஏற்கனவே கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் விரிசலை ஏற்படுத்தியுள்ளன.

இந்தநிலையில் "அமெரிக்காவால் தான் கனடா பிழைத்துக் கொண்டி ருக்கிறது" என டாவோஸ் மாநாட் டிலேயே ட்ரம்ப் வெளிப்படையாகப் பேசி யமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளது.



# ஏவுகணை பாதுகாப்புத் திட்டம் நிராகரிப்பு; கனடாவுக்கு நன்றி இல்லை என்கிறார் ட்ரம்ப்

அமெரிக்கா மற்றும் கனடா இடையே நீண்ட காலமாக வர்த்தக மற்றும் இராணுவ ரீதியிலான நல்லுறவு இருந்து வருகிறது. இந்நிலையில், விண்வெளியில் இருந்து வரும் ஏவுகணை மற்றும் ஹைப்பர்சோனிக் தாக்குதல்களை முன்கூட்டியே கண்டறிந்து தடுக்கும் 'கோல்டன் டோம்' எனப்படும் பில்லியன் டொலர் மதிப்பிலான பாதுகாப்பு கவச திட்டத்தை கிரீன்லாந்து மற்றும் வட அமெரிக்கா பகுதிகளில் செயல்படுத்த அமெரிக்கா திட்டமிட்டது.

இந்தத் திட்டத்திற்கு கிரீன்லாந்து பகுதியை பயன்படுத்துவது அமெரிக்காவின் முக்கிய நோக்கமாக இருந்தது. இந்த மெகா பாதுகாப்பு திட்டத்தை கனடா அரசு தற்போது நிராகரித்துள்ளது.

இதனால் கடும் ஆத்திரமடைந்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், தனது ட்ரூத் சோசியல் வலைதளத்தில் கனடாவை கடுமையாக சாடியுள்ளார்.

"அமெரிக்கா வழங்கும் இலவச பாதுகாப்பிற்கு கனடா நன்றி இல்லாமல் இருக்கிறது. அமெரிக்கா இருப்பதால் தான் கனடா நாடே உயிர்ப்புடன் இருக்கிறது" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடா பிரதமர் மார்க் கார்னி சமீபத்தில் சீனாவுடன் புதிய வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டதை ட்ரம்ப் கடுமையாக விமர்சித்துள்ளார்.

"சீனாவுடன் கனடா தற்போது காட்டும் நெருக்கம் மிகவும் ஆபத்தானது. இன்னும் ஒரு ஆண்டிற்குள் கனடாவை சீனா கபளீகரம் செய்துவிடும்" என்று ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

# நடைபாதையில் பெண் மீது தாக்குதல்; சந்தேகநபரைத் தேடுகின்றனர் பொலிஸார்

நடைபாதையில் பெண்ணை தாக்கினார் என குற்றம் சாட்டப்பட்ட நபரை டொராண்டோ பொலிஸார் தேடி வருகின்றனர்

இந்த தாக்குதலில் அந்த பெண் உயிருக்கு ஆபத்தான நிலையில் காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் கடந்த 22 ஆம் திகதி அதிகாலை, Vaughan Road மற்றும் St. Clair Avenue West சந்திப்புப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு முன் அறிமுகமில்லாத சந்தேக நபர், அவரை தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பின்னர் சம்பவ இடத்துக்கு வந்த அவசர சேவைகள், அந்த பெண்ணை உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றன.

நேற்று சனிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில், பொலிஸார் சந்தேக நபரின் படங்களை வெளியிட்டுள்ளனர்.



# விபத்தில் காயமடைந்த பெண் மருத்துவமனையில் உயிரிழப்பு




யுதயஒ பகுதியில் கடந்த வியாழக்கிழமை காலை பிக்கப் டிரக் மோதி காயமடைந்த 57 வயதுடைய பெண், மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என Durham பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் கடந்த 22 ஆம் திகதி காலை 11 மணிக்கு பிறகு, Kingston Road West மற்றும் Ritchie Avenue சந்திப்புப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

மேற்படி பெண் சந்திப்புப் பகுதியில் வீதியை கடந்து செல்லும் போது பிக்கப் டிரக் அவரை மோதி உள்ளது.

இந்த விபத்தில் அவர் உயிருக்கு ஆபத்தான காயங்களை அடைந்த நிலையில், மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அங்கு அவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ நேரத்தில், வாகன ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே தங்கி, பொலிஸாருக்கு முழுமையாக ஒத்துழைத்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்படுமா என்பது குறித்து பொலிஸார் இதுவரை தெரிவிக்கவில்லை. விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது என அவர்கள் கூறியுள்ளனர்.